# Diocesan News Letter
## VELLORE
(FOR PRIVATE CIRCULATION ONLY)


MERCY AND HOPE

"இரக்கமும் எதிர்நோக்கும்"

Vol. 21 | November - 2025 | No. 11




## Christ the King of the Universe



Shepherd's Voice

## "A Communion of Saints, a People of Hope"

Dear Brothers and Sisters in Christ,

As we step into the sacred month of November, our hearts are drawn to eternity. The Church, in her wisdom and tradition, invites us to reflect on our destiny in Christ, to remember those who have gone before us, and to prepare ourselves with renewed faith for the Lord's coming.

This is a month marked by memory, mystery, and mission-three dimensions that sustain our journey as the pilgrim Church.

**The Solemnity of All Saints - A History of Hidden Holiness (1 November)**

The Feast of All Saints originated in the early centuries of Christianity as a way of honouring the martyrs-those who gave their lives for Christ in times of persecution. By the 4th century, local churches began to commemorate these witnesses in communal celebrations. The current date, 1 November, was established by Pope Gregory III in the 8th century, when he consecrated a chapel in St. Peter's Basilica in honour of all the saints. Pope Gregory IV extended it to the universal Church in the 9th century.

This solemnity reminds us that holiness is not reserved for a few, but is the universal call of every baptized person. It embraces both canonized saints and the countless unnamed holy men and women who lived humble lives of faith, love, and sacrifice-many of them our own ancestors, parents, teachers, and elders in faith.

On this feast, let us not only admire the saints but be inspired by them. May our parishes celebrate this day with children dressed as saints, creative catechesis, and community prayers that help our faithful understand that to be holy is to live with love, humility, and fidelity in our everyday lives.

**All Souls' Day - A Tradition of Prayerful Remembrance (2 November)**

The Commemoration of All the Faithful Departed-popularly known as All Souls' Day-has its roots in 10th-century monastic communities. It was Abbot Odilo of Cluny who, in 998 AD, instituted a day of prayer and Masses for the departed monks of his order, which quickly spread throughout the Church.

All Souls' Day teaches us a central truth of our Catholic faith: that the communion of saints extends beyond death. Our prayers, especially the Holy Sacrifice of the Mass, aid the souls in purgatory as they are purified in God's mercy.

As a diocese, we are especially called to remember with gratitude : Our deceased bishops, priests, religious and catechists, who served us with devotion; Our loved ones, who nurtured us in the faith;And the forgotten dead, for whom no one may pray.

I strongly encourage every parish to Celebrate special Requiem Masses throughout the octave; bless cemeteries and encourage visits with family prayer; organize novena prayers for the departed; and support elderly and grieving parishioners with pastoral care.

**The Season of Advent  Living in Holy Expectation**

Towards the end of November, we enter Advent, the season that opens the liturgical year and prepares us to celebrate the birth of Jesus Christ. The word ***Adventus*** in Latin means “coming”-and it refers not only to Christ's historical coming at Bethlehem, but also His coming today in our hearts and His final return in glory.

The observance of Advent goes back to at least the 5th century, when the Church in Gaul and Spain kept a period of fasting and prayer in preparation for Christmas. Over time, it developed into a season marked by hopeful waiting, interior conversion and joyful anticipation.

Let this Advent not be overtaken by commercial distractions, but be rooted in: Daily prayer and Scripture reading; Advent wreaths and community celebrations; Confession and Reconciliation; Charity to the poor, lonely, and abandoned.

Let our families become domestic churches, preparing not only our homes, but our hearts for the one who is to come.

**Living the Communion of Saints**

Dear Brothers and Sisters, the three celebrations-All Saints, All Souls, and Advent-remind us of our place in the great story of salvation. We are not alone. We are part of a Church that spans heaven, earth, and purgatory-a communion sustained by prayer, sacrifice, and love.

Let us live November not in fear of death, but in faith in resurrection. Let us carry forward the memory of the saints and the legacy of our departed. Let us prepare the way of the Lord with faith, fasting, and joyful generosity.

May God bless you all!

With mercy and hope,

**+ Ambrose Pitchaimuthu**
Bishop of Vellore

## BISHOP'S PROGRAMME

| | | | |
|---|---|---|---|
| 02 | Sun | M | All Souls' Day Mass, Cathedral - Vellore |
| | | E | All Souls' Day Mass, Cemetery, Old Town-Vellore |
| 03 | Mon | | Tribunal Meeting |
| 04 | Tue | M | St. Charles Convent, Ammoor |
| 05 | Wed | | Tamil Nadu Prison Ministry Executive Meeting |
| 06 | Thu | | SC/ST Commission Meeting |
| 08 | Sat | M | Mesiya Aanmiha Maiyam, Agaramcherri |
| 09-14 | | | Priests' Annual Retreat, Vailankanni |
| 16 | Sun | | Thanks giving for the canonization of St. Maria Troncatti FMA, Cathedral - Vellore |
| 17-18 | | | PMO, Bangalore |
| 20-21 | | | Varanasi |
| 22 | Sat | | St Joseph Boy's Higher Secondary School Golden Jubilee, Pathiyavaram |
| 23 | Sun | M | Holy Mass, Perumanam |
| | | E | Pallikaranai |
| 26-30 | | | Mission Congress, Malaysia |

## HOLY FATHER'S INTENTION
**For the prevention of suicide**

Let us pray that those who are struggling with suicidal thoughts might find the support, care, and love they need in their community, and be open to the beauty of life.

# VICAR GENERAL OFFICE

## Annual Retreat - Diocesan Priests of Vellore

Our Lady of Vellankanni Shrine
($9^{th}$ to $14^{th}$ November - 2025)

Dear Rev. Fathers,

Greetings to you in Jesus and our blessed Mother Mary !

We shall have our Annual Retreat from November $9^{th}$ 8pm to $14^{th}$ afternoon 2025 at Our Lady of Vellankanni Retreat Centre. All of us are asked to attend the retreat without fail. Anyone seeking exemption kindly inform the Bishop well in advance.

Arriving the retreat center could be on your own. As usual TA will be paid. Appreciating your cooperation.

**Note :**

Please take with you

1. Holy Bible & breviary
2. Cassock
3. Mass Diary both Parish and Personal
4. Toiletry Items

Please pray for a fruitful Retreat and request your parishioners to pray for us.

Sincerely yours in Christ,

Rev. Msgr. **M.John Nicholas**
Vicar General

## Closure of the Jubilee Year Celebration

Dear Reverend Fathers,

Greetings to you in Jesus and our blessed Mother Mary!

On 10 th December 2025, Wednesday we will have the celebration of the closure of the jubilee year 2025 in our Diocese along with special Christmas celebration for our priests followed by the celebration of the first year anniversary of the episcopal consecration of our beloved Bishop.

The program schedule is as follows:

9:30 AM - Arrival
10:00 AM - Talk
11:00 AM - Break
11:15 AM - Talk
12:00 PM - Christmas celebration and felicitation to our Bishop
1:00 PM - Lunch
2:30 PM - Adoration and confession
3:30 PM - Announcements
4:00 PM - Tea
5.45 PM - Vesting
6:00 PM - Mass at cathedral

Two persons from each parish are expected to participate in the Mass. supper will be provided for all.

Sincerely yours in Christ,
Rev. Msgr. **M.John Nicholas**
Vicar General

## இந்திய ஆயர் பேரவை

இந்திய ஆயர் பேரவையின் (CCBI) பொதுநிலையினர் பணிக்குழு நடத்திய தேசிய கருத்தரங்கு "கூட்டியக்க திருஅவையில் எதிர்நோக்கின் திருப்பயணிகளான பொதுநிலையினர்" (Laity as Pilgrims of hope on a synodal path) என்ற தலைப்பில் அக்டோபர் 14 முதல் 16 வரை உத்திரபிரதேச மாநிலம், வாரணாசி மறைமாவட்ட மேய்ப்புபணி மையத்தில் நடைபெற்றது. 70 நபர்கள் கலந்து கொண்ட தேசிய கருத்தரங்கில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு (20 நபர்கள்) தமிழகத்திலிருந்து கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதில் வேலூர் மறைமாவட்ட பொதுநிலையினர் சார்பாக வேலூர் மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழுவின் செயலர் திரு. A.J. ரூபன் பங்கேற்றார். இந்திய ஆயர் பேரவையின் பொதுநிலையினர் பணிக்குழுவின் தலைவரும், வாரணாசி மறைமாவட்ட ஆயருமான, மேதகு யூஜின் ஜோசப் அவர்களும், மேனாள் தலைவரும், பெங்களூரு உயர்மறைமாவட்ட பேராயரும் மேதகு. பீட்டர் மச்சாடோ அவர்களும் மற்றும் மும்பை உயர்மறைமாவட்ட பேராயர் மேதகு ஜான் ரோட்ரிகஸ் ஆகியோரும் கலந்து கொண்டு பொதுநிலையினரை உற்சாகப்படுத்தினர். அருள்முனைவர். பால் புதுச்சேரி CSC, வழக்கறிஞர் கௌரவ் திருப்பாதி, திருமதி. கிளாரா, அருள்முனைவர். சலீன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

இக்கருத்தரங்கின் முத்தாய்ப்பாக அக்டோபர் 15-ம் தேதி மாலை வாரணாசி மறைமாவட்ட பேராலயத்தில் இந்திய பொதுநிலையினரின் பாதுகாவலராக திருத்தந்தை அவர்களால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட புனித தேவசகாயம் அவர்களின் நினைவாக சிறப்பு நன்றித் திருப்பலி நடைபெற்றது. பொதுநிலையினாராக சாட்சிய வாழ்வு வாழ்ந்து மரித்த புனித தேவசகயாம் போல யூபிலி 2025-ஐ கொண்டாடும் பொதுநிலையினராகிய நாம் அனைவரும் இவ்வுலகில் உயிரோட்டமுள்ள அர்ப்பணமிக்க பொதுநிலையினராக அவரவர் சார்ந்துள்ள மறைமாவட்டங்களில் செயல்பட உறுதி ஏற்றுக்கொண்டனர்.

தொகுப்பு
திரு. A.J. **ரூபன்**
பொது நிலையினர் பணிக்குழுவின் செயலர்

# PROCURATOR'S OFFICE

## Mission Sunday Collection - 2025

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Thirumalpadi | 6850 |
| 2 | Kariyandal | 17500 |
| 3 | Bagayam | 61537 |
| 4 | Kovilur | 70000 |
| 5 | Thanipadi | 5010 |
| | **TOTAL** | **160897** |

Thanks for your generous contribution for Mission Sunday Collection. Those who have not sent Mission Sunday Collection kindly send it to us as early as possible.

**Fr. S. Richard Peraira**
Procurator

## BIRTHDAY

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. B. Edwin Savariappa | 05.11.1980 |
| 2 | Rev. Fr. Y. Arockiasamy | 08.11.1958 |
| 3 | Rev. Fr. S. Irudayaraj | 08.11.1973 |
| 4 | Rev. Fr. S. John Bosco | 09.11.1949 |
| 5 | Rev. Fr. S. Ambrose | 18.11.1980 |
| 6 | Rev. Fr. I. Jeevagan | 19.11.1985 |
| 7 | Rev. Fr. S. Richerd Peraira | 25.11.1978 |
| 8 | Rev. Fr. S. Lua Thomas | 25.11.1978 |

**மேய்ப்புப்பணி மையம்**

## திருவண்ணாமலை பங்கில் பங்கு பேரவை உருவாக்கம்

திருவண்ணாமலை உலக மாதா பங்கிலுள்ள அனைத்து அன்பியங்களை, அருட்தந்தையர்கள் சந்தித்து அன்பியத்தின் நோக்கம் செயல்பாடுகள் குறித்து கருத்துகள் வழங்கியபின் அன்பியங்கலிருந்து அன்பிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அன்பிய பொறுப்பாளர்களிலிருந்து பங்கு பேரவைக்கான உறுப்பினர்கள் மற்றும் நியமன உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்றது. பின்பு பங்குபேரவையின் நோக்கம், பங்கு மேய்ப்புப்பணியின் திட்டம் மற்றும் இணைந்து செயல்படுதல் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. இறுதியாக பங்குபேரவையின் துணை தலைவர் செயலர், பொருளர் ஆகியோர் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

05.10.2025 ஞாயிறு காலை திருப்பலியில் பங்குதந்தை அருட்பணி. S.லூர்துசாமி, V.F. அருட்தந்தை R.ஜேம்ஸ் வின்சென்ட், உதவி பங்குதந்தை அருட்பணி அமுதன் மற்றும் அருட்சகோதரிகள், பங்கு மக்கள் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட துணை தலைவர், செயலர், பொருளர் உறுப்பினர்களுக்கு வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் அருட்பணி. N.T.இருதயராஜ் அவர்களால் பணிப் பொறுப்பு அளிக்கப்பட்டது தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குபேரவை உறுப்பினர்கள் பணிப் பொறுப்பிற்க்கான உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்கள். இயக்குநர், பங்குத்தந்தையும், பங்குபேரவை உறுப்பினர்களையும் பாராட்டினார்.

## திருமலை பங்கில் பங்கு பேரவை உருவாக்கம்

புனித தோமினிக் சாவியோ பங்கில் அக்டோபர் மாதம் 09 தேதி முதல் 11 தேதி வரை வேதியர் சாமுவேல் அவர்களால் அனைத்து அன்பியங்களை ஒன்றுக்கூட்டி அன்பியத்தின் செல்பாடுகள் குறித்து பயிற்சி கொடுத்தார். மேலும் பங்குப்பேரவையின் நோக்கம், பேரவை செயல்பாடுகள் பற்றி அன்பிய குழுக்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. 17.10.2025 அன்று அன்பிய பொறுப்பாளர்களுக்கு தேர்தல் நடை பெற்று அதில் பங்குபேரவை துணை தலைவர் செயலர், பொருளர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 19.10.2025 அன்று ஞாயிறு காலை திருப்பலியில் பங்கு தந்தை அருட்பணி A. குழந்தை யேசு, அன்பிய

குழுக்கள் முன்னிலையில் வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புபணி நிலைய இயக்குநர் அருட்பணி. N.T. இருதயராஜ் அவர்களால் பணிபொறுப்பு அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குபேரவை உறுப்பினர்கள் பணிப் பொறுப்பிற்கான உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்கள். இயக்குநர், பங்குத்தந்தையும், பங்குபேரவை உறுப்பினர்களையும் பாராட்டினார்கள்.

**திருமண தாயரிப்பு வகுப்புக்கள்**

மதிப்புக்குரிய பங்கு தந்தையர்களுக்கு,

திருமண தயாரிப்பு வகுப்புகள் நவம்பர் - 2025 முதல் வந்தவாசியில் நடைபெறாது. திருவண்ணாமலையில் முதல் சனி மற்றும் ஞாயிறு இரண்டு நாட்களும், வேலூரில், மாதத்தின் மூன்றாம் சனி மற்றும் ஞாயிறு இரண்டு நாட்களும் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை மதிய வகுப்பில் பெற்றோர்கள் இத்திருமண தயாரிப்பு வகுப்பில் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளபடுகிறார்கள். (பிள்ளைகளுக்கு இரண்டு நாட்கள், பெற்றோர்களுக்கு ஞாயிறு மதியம் அரை நாள் வகுப்பு) இவ்வகுப்புகளில் கலந்துக் கொண்டால்தான் திருமண தயாரிப்புக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

**நவம்பர் மாத திருமண தயாரிப்பு வகுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| 01.11.2025 | : | மாதத்தின் முதல் சனிக்கிழமை ஒரு நாள் மட்டும் வகுப்பு நடைபெறும் மதிய வகுப்பில் பெற்றோர்கள் கலந்து கொள்ள வேண்டும். |
| 02.11.2025 | : | கல்லறை திருநாள் என்பதால் ஞாயிற்றுக்-கிழமை வகுப்பு நடைபெறாது. |
| இடம் | : | உலக மாதா ஆலயம் - திருவண்ணாமலை |
| சனிக்கிழமை (01.11.2025) | : | காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை |

| | | |
|---|---|---|
| 15, 16-11-2025 | : | மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை |
| இடம் | : | வேலூர் ஆயர் இல்லம் (ஜூபிலி ஹால்) |
| 15.11.2025 சனிக்கிழமை | : | காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை |
| 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை | | காலை 10.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை |

திருமண தயாரிப்பு பிள்ளைகளை பெற்றோரை அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மறைக்கல்வி - நன்னெறி பாடங்கள் ஆய்வு**
**திருப்பத்தூர் மறைவட்டம் - 2025 - 2026**

| நாள் | வேளை | பார்வையிடும் பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 22.10.2025 புதன் | காலை | 1. தோமினிக் சாவியோ ஆண்கள் மேனிலைப்பள்ளி, திருப்பத்தூர் |
| | | 2. தோமினிக் சாவியோ தொடக்கப் பள்ளி, திருப்பத்தூர் |
| | | 3. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, கோவிலூர் |
| | பிற்பகல் | 1. புனித தொன்போஸ்கோ மெட்ரிக் மேனிலைப்பள்ளி, திருப்பத்தூர் |
| | | 2. புனித சார்லஸ் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, திருப்பத்தூர் |
| 23.10.2025 | காலை | 1. தொன்போஸ்கோ ஆண்கள் மேனிலைப் பள்ளி, |
| வியாழன் | | 2. தொன்போஸ்கோ தொடக்கப்பள்ளி, ஜோலார்பேட்டை |
| | பிற்பகல் | 1. புனித ஜோசப் பெண்கள் மேனிலைப் பள்ளி, ஜோலார்பேட்டை |

| | | |
|---|---|---|
| | | 2. புனித ஜோசப் தொடக்கப்பள்ளி, ஜோலார்பேட்டை |
| | | 3. இன்பென்ட் ஜீசஸ் மெட்ரிக்பள்ளி, ஜோலார்பேட்டை |
| 27.10.2025 திங்கள் | காலை | 1. புனித அந்தோணியார் மேனிலைப் பள்ளி, உதயேந்திரம் |
| | | 2. புனித அந்தோணியார் ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, உதயேந்திரம் |
| | பிற்பகல் | 1. S.F.S. மெட்ரிக் மேனிலைப்பள்ளி, ஆலங்காயம் |
| | | 2. S.F.S. மெட்ரிக் மேனிலைப்பள்ளி, வாணியம்பாடி |
| | | 3. புனித ஜான்ஸ் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, குடியாத்தம் |
| 28.10.2025 செவ்வாய் | காலை | 1. அக்ஸிலியம் பெண்கள் மேனிலைப் பள்ளி, காந்திநகர் |
| | | 2. அக்ஸிலியம் தொடக்கப்பள்ளி, காந்திநகர் |
| | | 3. அக்ஸிலியம் ஆங்கில தொடக்கப் பள்ளி, காந்திநகர் |
| | பிற்பகல் | 1. இன்பென்ட் ஜீசஸ் மெட்ரிக்பள்ளி, இடையஞ்சாத்து |
| | | 2. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, சந்தவாசல் |

## போளூர் மறைவட்டம்

| | | |
|---|---|---|
| 03.11.2025 திங்கள் | காலை | 1. புனித தொன்போஸ்கோ மேல்நிலைப்பள்ளி, போளூர் |
| | | 2. புனித ஜோசப் ஆர்.சி.எம். தொடக்கப் பள்ளி, போளூர் |
| | | 3. அக்ஸிலியம் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, போளூர் |

| | | | |
|---|---|---|---|
| | பிற்பகல் | 1. | தூய நெஞ்ச தொடக்கப்பள்ளி, போளூர் |
| | | 2. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, இரண்டரிப்பட்டு |
| 06.11.2025 வியாழன் | காலை | 1. | இம்மாகுலேட் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, காரியந்தல் |
| | | 2. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, மருத்துவாம்பாடி |
| | பிற்பகல் | 1. | புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளி, சி.நம்மியந்தல் |
| | | 2. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, சி.நம்மியந்தல் |
| | | 3. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, கொரட்டாம்பட்டு |
| 07.11.2025 வெள்ளி | காலை | 1. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, திருமலை |
| | | 2. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, வடமாதிமங்கலம் |
| | | 3. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, அரும்பலூர் |
| | பிற்பகல் | 1. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, செமியமங்கலம் |
| | | 2. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, ஆத்துரை |
| | | 3. | ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, முடையூர் |

இறை பணியில் அன்புடன்
பேரருட்பணி. N.T. **இருதயராஜ்**
மேய்ப்புப்பணி மையம், வேலூர்

## JOURNEY OF HOPE (BLESSING OF JUBILEE CROSS) DEANERY CENTRE VANDAVASI (Oct 09 to Nov 08)

1. Sacred Heart Church - Vandavasi (Oct 09 - Oct 11)
2. St. Don Bosco Church - Mazhuvankarunai (Oct 12 - Oct 14)
3. Christ the king Church - Nelliyankulam (Oct 15 - Oct 17)
4. St. Antony Church - Nallur (Oct 18-Oct 20)
5. St. Theresa of Child Jesus Church - Theresapuram (Oct 21 - Oct 23)
6. Sts. Peter and Paul church Japthikarani ((Oct 24 - Oct 26)
7. St. Antony Church - Thirumalpadi (Oct 27-Oct 29)
8. St. Francis Xavier church - Parasur (Oct 30 - Nov 1)
9. Our Lady of Dolours church - Thiruvettipuram (Cheyyar) (Nov 2 – Nov 5)
10. St. Antony church - Sirungatoor (Nov 6 - Nov 8)

**DEANERY CENTRE ARAKKONAM (Nov 09 to Dec 10)**

1. St. Antony church - Arcot (Nov 9 - Nov 11)
2. Our Lady of Vellanganni church - Ranipet (Nov 15 - Nov 18)
3. Sacred Heart of Jesus church - Arakkonam (Nov19- Nov 22) (Jubilee cross will be placed at Sacred Heart of Jesus church for pilgrim)
4. St. Theresa church - Haffieldspet (Nov26-Nov 28)
5. Mary help of Christians church - Uriurkuppam (Nov 29 - Dec 01)
6. St. Francis Xavier Church - Sognur (Dec 2 - Dec 4)
7. Our Lady of Perpetual Succour Church - Alappakkam (Dec 5 - Dec 7)
8. St. Thomas Church - Sipcot (Dec 8-Dec10)

இறை பணியில் அன்புடன்
பேரருட்பணி. N.T. **இருதயராஜ்**
மேய்ப்புப்பணி மையம், வேலூர்

## வேலூர் சமூக சேவை சங்கம்

27.09.2025 அன்று திருச்சியில் உள்ள தமிழ்நாடு சமூக சேவை சங்கத்தில் (TASOSS) புலம்பெயர்ந்தோர்களுக்கான கலந்தாய்வு கூட்டம் நடைப்பெற்றது. இதில் தமிழக மறைமாவட்டத்தில் உள்ள 12 இயக்குநர் தந்தையர்கள் கலந்துக்கொண்டார்கள். இக்கூட்டத்தை தேசிய இயக்குநர் தந்தை அருட்பணி. ஜெய்சன் முன்னின்று நடத்தினார். திருச்சி மறைமாவட்ட ஆயர் ஆரோக்கியராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். இதில் இந்தியா அளவில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள புலம்பெயர்ந்தோர்களுக்கான கூட்டத்திற்கு தயாரிப்பு மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டது. 28.09.2025 அன்று திருச்சியில் காரிதாஸ் இந்தியா மூலம் தமிழ்நாடு சமூக சேவை சங்கத்தில் (TASOSS) நடைபெற்ற கூட்டத்தில் CSR (Corporate Social Responsibility) சிஎஸ்ஆர் சட்ட திட்டங்களை பற்றிய புரிதலை ஏற்படுத்துதல் மற்றும் சிஎஸ்ஆர் நடைமுறை விளைவுகளை விளக்குதல் போன்ற ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இக்கூட்டத்தில் 27 தமிழக மறைமாவட்ட சமூக சேவை சங்கங்களின் இயக்குநர் தந்தையர்கள் கலந்துக்கொண்டார்கள். மேலும் நம்முடைய மறைமாவட்ட நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய ஆண் பெண் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் சட்ட உதவி பற்றியும் விவாதிக்கப்பட்டது.

09.10.2025 அன்று தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணைய தலைவர் அருட்பணி. ஜோ.அருண் (சேசு சபை) அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வேலூர் சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை அருட்பணி. M.அமலநாதன், திட்ட

மேலாளர் திரு. பேட்ரிக், வேலூர் மாவட்ட ஆட்சியர், அரசு அதிகாரிகள், வேலூர் சட்டமன்ற உறுப்பினர், நகராட்சி மேயர், மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள், மற்றும் சிறுபான்மையினர் ஆணைய குழு இணைந்து திட்ட பணிகளுக்கான ஆய்வு நடைபெற்றது. இந்த ஆய்வின்போது இந்த மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் மக்களின் குறைகள், செயலுக்கு வராத திட்டங்கள், அனுமதி கிடைக்காத தேக்க நிலையில் உள்ள திட்டங்கள் பற்றி மிக நுணுக்கமாக அருட்பணி. ஜோ.அருண் ஆய்வு செய்தார். பெருபான்மையான திட்டங்களுக்கு உடனடியாக அனுமதி அளிக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு தந்தார்கள். இக்கூட்டத்தில் கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் மற்றும் புத்த மதத்தினர்கள் என மொத்தமாக 850 நபர்கள் கலந்துக்கொண்டு பயன்பெற்றார்கள். அன்று மாலை சிறுபான்மையினர் ஆணைய தலைவர் ஆயர் அவர்களை சந்தித்து நமது மறைமாவட்டத்தில் உள்ள குருக்கள், இருபால் துறவியர்களுக்கான பயிற்சி முன்னெடுப்பும் சிறுபான்மையினர்களுக்கான நல்வாழ்வு திட்டங்கள் பற்றியும் விளக்கி கூறினார்.

03.10.2025 - அன்று இயக்குநர் தந்தையின் அறிவுறுத்தலின்படி பேர்ணாம்பட்டு மற்றும் செண்டத்துார் போன்ற கிளைப்பங்குகளில் பங்குதந்தையின் உதவியுடன் இரண்டு கோல்பிங் குழுக்களை கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார் உருவாக்கினார். பங்குதந்தைக்கு இயக்குநர் தந்தையின் சார்பாக வாழ்த்துகளும் நன்றிகளும்.

08.10.2025 - அன்று கோல்பிங் தேசிய இயக்குநர் தந்தை பேரருட்பணி மரிய சூசை, திட்ட மேலாளர் திரு. செபாஸ்டின் மற்றும் திட்ட அலுவலர் திரு. பால் கிளாப் ஆகியோர் இயக்குநர் தந்தை

M.அமலநாதன் அவர்களுடன் வேலூர் மறைமாவட்ட ஆயர் அம்புரோஸ் பிச்சைமுத்து அவர்களை சந்தித்து வேலூர் மறைமாவட்டத்தின் கோல்பிங் இயக்கம் பற்றியும் அதனுடைய செயல்பாடுகள் பற்றியும் கலந்துரையாடினார்கள். மேலும் கோல்பிங் செயல்பாடுகளையும், வரவு செலவு கணக்குகளையும் பார்வையிட்டனர். இவர்களுடன் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. ஏசுகுமார் மற்றும் கணக்காளர் திரு. இராஸ் லூயிஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

23.10.2025 - அன்று இயக்குநர் தந்தையின் அறிவுறுத்தலின்படி கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் கஸ்தம்பாடி பங்கிற்கு சென்று அங்குள்ள கோல்பிங் குழுவை சந்தித்து அதன் செயல்பாடுகளை பார்வையிட்டார்.

## HUNGER & DISEASE FUND COLLECTION - 2025

| வரிசை எண் | தேதி | பங்குபெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | 27.09.2025 | திருமலை | 1,100 |
| 2 | 04.10.2025 | இராணிப்பேட்டை | 20,000 |

அருட்பணி. M.**அமலநாதன்**
இயக்குநர், VSSS

தொகுப்பு
திரு. A.**ஏசுகுமார்**

## திருவண்ணாமலை சமூக சேவை சங்கம்

திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் மாதர் சங்க உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் கீழ்பென்னாத்தூர் பங்கு, அகல் மையத்தில் காலை 11.00 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி.மனோஜ் மற்றும் அகல் மைய இயக்குநர் அருட்பணி. ராயப்பன், TVMSSS இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் மற்றும் TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்ப சேகர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றுது. இந்த கூட்டத்தில் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து கருத்துகள் பகிரப்பட்டது. 3 புதிய குழுக்கள் உருவாக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் 60 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். உடையார்குப்பம் பங்கு, சகாயபுரத்தில் செயல்படும் மாதர் சங்கங்களை சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் காலை 9.00 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி. லாரன்ஸ் பயஸ் மற்றும் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் மற்றும் TVMSSS திட்ட மேலாளர் திருமிகு. இன்ப சேகர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றுது. இந்த கூட்டத்தில் குழுக்களை மீண்டும் வலுப்படுத்தி 5 குழுக்கள் உருவாக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் 75 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கொழப்பலூர் பங்கில் செயல்படும் மாதர் சங்கம், விவசாய சங்கம் உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் காலை 9.00 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி. பால் வேளாங்கண்ணி மற்றும் இயக்குநர் தந்தை அருட்பணி S.பிரான்சிஸ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து கருத்துகள் பகிரப்பட்டது. புதிய 5 குழுக்களை உருவாக்குவது என தீர்மானிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் 60 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கெங்காபுரம் பங்கில் செயல்படும் மாதர் சங்கம், விவசாய சங்கம் உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம் காலை 11.00 மணியளவில் பங்குதந்தை அருட்பணி.செல்வம் இவர்கள் முன்னிலையில் நடைபெற்றுது. இந்த கூட்டத்தில் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து கருத்துகள் பகிரப்பட்டது. புதிய 5 குழுக்களை உருவாக்குவது என தீர்மானிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் உறுப்பினர்கள 75 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

செய்தி தொகுப்பு

திரு. **லூ. தாமஸ் இன்ப சேகர்**<br>
TVMSSS திட்ட மேலாளர்

அருட்பணி. S.**பிரான்சிஸ்**<br>
இயக்குநர்

## மரியாயின் சேனை

11.10.2025 சனிக்கிழமையன்று தூய நெஞ்ச ஆண்டவர் ஆலயம், வந்தவாசி விக்காரியேட்டின் மரியாயின் சேனை கியூரியா பேரருட்பணி M.மார்டின் அடிகளார் அவர்கள் தலைமையில் சேனையின் “ஆர்சேஸ் விழா” கொண்டாடியது. இதில் பேரருட்பணி பால் போஸ்கோ, பக்தசபை இயக்குனர் தந்தை அவர்கள் விழா சிறப்புரை வழங்கினார். மற்றும் பேரருட்பணி ஆ.மார்டின் அடிகளார், கிளைப்பங்கு அருட்தந்தையர்கள், கொமித்சிய பொறுப்பாளர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்பு வருகை தந்த 8 கிளைப்பங்குகளிலிருந்து மொத்தம் 120 சேனையாளர்களும் அன்னைக்கு தங்களின் பிராமாணிக்க வாக்குறுதியைப் புதுப்பித்த பின் இறுதி ஜெபத்துடன் குருவின் ஆசீருடன் சிறப்பாக விழா நிறைவு பெற்றது. வருகை தந்த அனைவரும் சிறப்பு பகல் உணவு அளிக்கப்பட்டது.

19.10.2025 ஞாயிற்றுக்கிழமை புனித அற்புத காணிக்கை அன்னை ஆலயம், ஆரணி பங்குத்தந்தை தலைமையில் மரியாயின் சேனை கியூரியா தனது முதலாம் ஆண்டு “ஆர்சேஸ் விழா” கொண்டாடி அன்னை மாமரிக்கு தங்களின் பிராமாணிக்க வாக்குறுதியைப் புதுப்பித்தனர். இதில் சிறப்புரையாக பக்த சபை இயக்குனர் தந்தை A.பால்போஸ்கோ அவர்களும் பங்குத்தந்தை பேரருட்பணி மங்களம் தாவீது அவர்களும் மற்றும் உதவி பங்குதந்தை, கிளைப்பங்கு தந்தையதர்கள் கொமித்சிய பொறுப்பாளர்கள் வாழ்த்துரை வழங்கினர். இறுதி ஜெபத்துடன் குருவின் ஆசீருடன் விழா மிக சிறப்பாக இனிதே நிறைவு பெற்றது. மொத்தம் 130 சேனையாருக்கும் சிறப்பு பகல் உணவு அளிக்கப்பட்டது.

மரியே வாழ்க
சகோ. **இரத்தினா மேரி**
கொ. செயல் தலைவி

## இளைஞர் பணிக்குழு

### மறைமாவட்ட அளவில் சிறப்பு நிகழ்வுகள்

1. மாதம்தோறும் ஜெபமாலை:

அக்டோபர் மாதம் முழுவதும் மூன்று பங்குகளாக இணைந்து இளைஞர்களோடு பங்குத்தந்தையர்கள் மிகச் சிறப்பாக மாலை வேளையில் ஜெபமாலை ஜெபித்தார்கள். சிறப்பாக தமிழ்நாடு இளைஞர் பணி குழுவோடும் இணைந்து இளம் மாணாக்கர்களாக, இளைஞர்களாக பங்குத்தந்தையர்களோடு ஒன்றிணைந்து ஜெபித்த நிகழ்வுகள் சிறப்பாக அமைந்திருந்தது. எனவே அனைத்து இளைஞர்களுக்கும் பங்குத்தந்தையர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

2. மனித உரிமை நாள், இளைஞர் பணி குழு பொதுகுழு கூட்டம் மற்றும் புதிய தலைவர்களுக்கான தேர்தல் டிசம்பர் 7, 2025

மனித உரிமைகளின் மேன்மையை கற்றுக்கொள்ள டிசம்பர் மாதம் 7ம் தேதி வேலூர் ஆயர் இல்லத்தில் ஒரு நாள் சிறப்பு கருத்தமர்வு மறைமாவட்ட பொதுக்குழு இளைஞர்களுக்கு நடத்தப்படுகிறது. அதனைத் தொடர்ந்து பொதுக்குழு கூட்டமும், சிறப்பாக தேர்தல்கள் நடத்தி வருகின்ற இரண்டு ஆண்டுகளுக்கான புதிய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். எனவே தங்களின் பங்குகளில் சிறப்பாக செயல்படும் இளைஞர்களை மறைமாவட்ட இளைஞர் பணி குழுவோடு இணைந்து செயல்பட இந்த தேர்தல் கூட்டத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அல்லது அவர்களைப் பற்றிய தரவுகளை என்னிடம் பகிருமாறும் அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பங்குகளில் உள்ள இளைஞர்கள் தமிழ்நாடு மற்றும் தேசிய அளவில் பணிபுரிய ஊக்குவிக்குமாறும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## மறைவட்ட அளவில் சிறப்பு நிகழ்வுகள்

1. கருத்தமர்வு (8.11.2025) - வேட்டவலம் மறைவட்டம்

வேட்டவலம் மறைவட்ட இளைஞர்களுக்கான ஒருநாள் கருத்தமர்வு "சமூக வலைதளங்களும் - இளைஞர்களும்" என்ற தலைப்பில் இயேசு சபை குருக்களால், 08.11.2025 சனிக்கிழமை அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது.. எனவே வேட்டவலம் மறைவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளிருலிந்தும் குறைந்தது 15 இளைஞர்கள் கலந்து கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2. கருத்தமர்வு (16.11. 2025) - திருப்பத்தூர் மறைவட்டம் திருப்பத்தூர் மறைவட்ட இளைஞர்களுக்கான ஒருநாள் கருத்தமர்வு "இளைஞர்களும் - சமூக வலைதளங்களும்" என்ற தலைப்பில் திருப்பத்தூர் சகாய அன்னை ஆலயத்தில், 16.11.2025 அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது. இதனை சலேசிய அருள்தந்தையர்கள் வழி நடத்துகிறார்கள். ஞாயிறு திருப்பலி அன்று மாலை நடைபெறும். எனவே திருப்பத்தூர் மறைவட்ட பங்குகளிலிருந்து குறைந்தது 15 இளைஞர்கள் கட்டாயம் கலந்துகொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## பங்கு அளவில் சிறப்பு நிகழ்வுகள்

1. வாணியம்பாடி பங்கு - இளைஞர் கொண்டாட்டம்

வாணியம்பாடி பங்கில் இளைஞர்கள் ஒன்றிணைந்து இளைஞர் ஞாயிறை சிறப்பித்தார்கள். ஆடம்பரமான பேரணியோடு ஆலய வளாகத்தில் கொடியேற்றம் செய்து, நடனமாடி, சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியில் இளைஞர் இயக்கத்தின் உறுதி மொழியை ஏற்றுக்கொண்டதோடு, இயக்குநர் தந்தை சந்திப்பு மற்றும் கலை நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றன. இதனை ஏற்பாடு செய்த அப்பங்கின் புதிய பங்குத்தந்தை அருட்தந்தை. இன்னாசி முத்து அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அருட்பணி. A.**ஜெயசீலன்**
மறைமாவட்ட இளைஞர் இயக்குநர்

## கோடெப் தொழிற்பயிற்சி நிறுவனம் - சேத்பட் முப்பெரும் விழா

"உன்கையில் திறமை, இனிஇல்லை வறுமை" என்ற உயரிய நோக்கோடு கல்வியில் பின்தங்கிய கிராமப்புற ஏழை எளிய மாணவர்கள் தங்கள் வாழ்வில் முன்னேற பெரும் உதவியாக, ஏணிப்படியாக கோடெப் தொழிற்பயிற்சி நிறுவனம் செயல்படுகிறது. இந்நிறுவனத்தில் 7.10.2025 செவ்வாய்கிழமையன்று முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் முதலாவதாக : Campus Interview -EAFS தனியார் நிறுனவம் நடத்திய வேலைவாய்ப்புக்கான வளாக நேர்முகத்தேர்வு நடைபெற்றது.

இரண்டாவதாக : Palmyra Seed Plantation இடையன்குளத்தூர் கிராம ஏரிக்கரையில் 1300 பனைவிதைகள் நடப்பட்டது.

மூன்றாவதாக : Graduation Day நிறுவனத்தின் 8-ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது.

இந்த முப்பெரும் விழாவானது வேலூர் மறைமாவட்ட ஆயர்.மேதகு. முனைவர். அம்புரோஸ் பிச்சைமுத்து அவர்கள் தலைமையிலும், புனித தோமையார் மருத்துவமனை தலைமை நிர்வாகி அருட்சகோதரி. மரிய இரத்தினம் அவர்கள் முன்னிலையிலும், EAFS தனியார் தொழிற் நிறுவனத்தின் தலைமை ஆலோசகர் திரு. தாமஸ் அவர்கள் முன்னிலையிலும் மிகச்சிசறப்பாக நடைபெற்றது. ஆயர்தந்தை அவர்கள் ஆசிரியர்களின் அயரா உழைப்பினை பாராட்டியும், கடந்த கல்வியாண்டில் தேர்ச்சி பெற்ற 45 மாணவர்களுக்கு NTC பட்டத்தினை வழங்கி சிறப்பு செய்ததோடு அல்லாமல் மாணவர்கள் நீங்கள் அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்? What's NEXT என்ற கேள்வியையும் எழுப்பி அவர்களை சிந்திக்கவும் செய்து, ஆசியுரை வழங்கினார். பின்னர் சிறப்பான பரிசுகளை வழங்கி மாணவர்களை ஊக்குவித்தார். அருட்சகோதரி. மரிய இரத்தினம் அவர்கள Best Student மற்றும் Responsible Student என்ற பரிசுகளை வியந்து பாராட்டி

மாணவர்கள் தொடர்ந்து பொறுப்புள்ளவர்களாக வளர வேண்டுமென்று வாழ்த்தினார். கல்லூரி முதல்வர் திரு.மரிய லூயிஸ் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் சேர்ந்து நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்தனர். நிகழ்ச்சியில் பட்டம் பெற்ற மற்றும் பயில்கின்ற 110 மாணவர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் முடிவில் மாணவர்களுக்கு விருந்து அளிக்கப்பட்டது.

இப்படிக்கு
அருட்தந்தை. F. **பெலிக்ஸ் கமல்**
உதவி இயக்குநர்.
கோடெப் - சேத்பட்

## NECROLOGY

| | | |
|---|---|---|
| 1. | Rev. Fr. George Paetta SDB | 02.11.1978 |
| 2. | Rev. Fr. Jesurathinam | 05.11.1995 |
| 3. | Rev. Fr. Stephen Bernard SDB | 07.11.1997 |
| 4. | Rev. Fr. Thomas Selvam SDB | 08.11.1973 |
| 5. | Rev. Fr. George SDB | 09.11.1976 |
| 6. | Rev. Fr. Victor SDB | 10.11.1960 |
| 7. | Rev. Fr. Joseph Murphy SDB | 14.11.1971 |
| 8. | Rev. Fr. Francis Ardusso SDB | 14.11.1994 |
| 9. | Rev. Fr. Joseph SJ | 17.11.1991 |
| 10. | Rev. Fr. S. Velankanni | 20.11.1982 |
| 11. | Rev. Fr. Wilfred Daniel | 21.11.2002 |
| 12. | Rev. Fr. Amirthanathan | 22.11.1996 |
| 13. | Rev. Fr. Joseph Koorkamattam | 23.11.1953 |
| 14. | Rev. Fr. Ignatius Muthu SDB | 23.11.1967 |
| 15. | Rev. Fr. Susai Regis | 24.11.2020 |
| 16. | Rev. Bro. Thomas SHJ | 25.11.1981 |
| 17. | Rev. Fr. A. Pathrose | 25.11.2015 |
| 18. | Rev. Fr. A. Samuel | 26.11.2015 |

# OBITUARY

"உயிர்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25)



| பிறப்பு | குருப்பட்டம் | இறப்பு |
|---|---|---|
| 14.10.1953 | 05.05.1982 | 30.09.2025 |

## அருட்தந்தை ஆல்பின் ஜஸ்டஸ் கலிஸ்டஸ்

கன்னியாகுமாரி மறைமாவட்டம், தூய எலியாஸ் ஆலயம் பங்கைச் சார்ந்த தந்தை. பீட்டர் தங்கையா, தாய் மரிய லூயிஸ் இவர்களுக்கு நான்காவது மகனாக அருட்தந்தை ஆல்பின் ஜஸ்டஸ் கலிஸ்டஸ் அவர்கள் 1953 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் தேதி தக்கலையில் பிறந்தார்.

| பள்ளி | வகுப்பு | |
|---|---|---|
| தொடக்கப்பள்ளி | 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை | தக்கதலை அரசினர் தொடக்கப்பள்ளி, கன்னியாகுமாரி |
| நடுநிலைப்பள்ளி | 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை | தக்கதலை அரசினர் உயர்நிலைப்பள்ளி, கன்னியாக்குமாரி |
| | 9-ம் வகுப்பு | கார்ல்மேல் உயர்நிலைப்பள்ளி நாகர்கோயில், தஞ்சாவூர் |
| உயர்நிலைப் பள்ளி | 10-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு | புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர் |

| | | |
|---|---|---|
| PUC | Old PUC | அரசினர் சரபோஜி கல்லூரியில், தஞ்சாவூர் |
| UG | B.A.Philosophy | திருவனந்தபுரம் கல்லூரி |
| 9-ம் முதல் 11-ம் வரை | இளம் குருமடம் | தஞ்சாவூர், கார்மேல் ஆஷ்ரமத்தில் பயின்றார் |
| ஆன்மீக பயிற்சி | ஓராண்டு | தஞ்சாவூர் இளம் குருமடத்திலும், இரண்டாம் ஆண்டு திண்எவனத்திலும் பயின்றார் |
| தத்துவியியல் | | திருவனந்தபுரம் கார்மேல் துறவு மடத்தில் பயின்றார் |
| இறையியல் | மூன்றாண்டுகள் | பெங்களூரிலுள்ள கார்மேலரும் இறையியல் கல்லூரியில் பயின்றார் நான்காம் ஆண்டு புனித வளனார் பெரிய குருமடமான கேரளாவில் பயின்றார். |
| 1986-1988 | M.Th.Missiology | பெங்களூரிலுள்ள புனித பேதுரு உயர் குருமடத்தில் பயின்றார். |

| | |
|---|---|
| 1979 | மேதகு ஆயர் அந்தோணிமுத்து ஆண்டகை இசைவோடு வேலூர் மறைமாவட்டத்தில் தன்னை இணைத்து கொண்டார் |
| 1979-1981 | மேதகு ஆயர் மைக்கேல் அகஸ்டின் ஆண்டகை அவர்களால் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார். |
| 1981-1982 | 6 மாத காலம் குடியாத்தம், புனித யோவான் ஆலயத்தில் களப்பணியாற்றினார்<br>05.05.1982 மேதகு ஆரோக்கியசாமி கோட்டாறு ஆயர் அவர்களால் அருட்பொழிவு செய்யப்பட்டார் |
| 1982-1983 | சேத்துப்பட்டு தூய லூர்து அன்னை ஆலயத்தில் ஓராண்டு காலம் உதவி பங்குத்தந்தையாக பணியாற்றினார். |
| 1983-1984 | வந்தவாசி தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில் 6 மாத காலம் உதவி பங்குத்தந்தையாக பணியாற்றினார். |

| | |
|---|---|
| 1984-1985 | அரக்கோணம் தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில் 1 வருடம் உதவி பங்குத்தந்தையாக பணியாற்றினார் |
| 1933-2000 | 7 வருடம் செம்மியமங்களம் பங்குத்தந்தையாக பணி புரிந்தார் |
| 2000-2006 | 6 வருடம் ஜப்திகாரணி பங்குத்தந்தையாக பணிபுரிந்தார் |
| 2006-2013 | 7 வருடம் பல்லாலகுப்பம் பங்குத்தந்தையாக பணிபுரிந்தார் |
| 2013-2021 | 7 வருடம் அ. கட்டுபடி பங்குத்தந்தையாக பணிபுரிந்தார் |
| 25-07-2021 | முதல் பங்குத்தந்தையாக இருந்து 30.09.2025 அன்று வரை வேப்பூர் திருச்சிலுவை ஆலயத்தில் பணியாற்றினார். |

## அருட்தந்தை ஆல்பின ஜஸ்டஸ் கலிஸ்டஸ் அவர் ஆற்றிய பணிகள்

### 1. செம்மியமங்களம்

கிளைப்பங்கான அல்லியாமங்களம் கிராமத்தில் சிற்றாலயம் கட்டினார்.

கிளைப்பங்கான ராந்தம் கிராம்த்தில் சிற்றாலயம் கட்டினார்.

பங்குதந்தை இல்லத்தை புதுப்பித்தார்.

ஆலயத்திற்கு சொந்தமான 2 ஏக்கர் நிலத்தை ஏறக்குறைய 5 ஆண்டுகள் வழக்காடி மீட்டு மறைமாவட்டத்தில் சேர்த்தார்.

### 2. ஜப்திகாரணி

பங்குதந்தை இல்லத்தை புதுப்பித்தார்.

புதிய பள்ளியினை புதிய வளாகம் மற்றும் மதில் சுவரோடு கட்டி கொடுத்தார்.

### 3. பல்லாலக்குப்பம்

பங்கு ஆலயத்தை புதுப்பித்தார்.

பங்தந்தை இல்லத்தை புதுப்பித்தார்

108 மணிநேரம் அன்னைக்கு ஜெபமாலையும், ஆராதனையும் நடத்தி மக்களிடத்தில் பெரும் மதிப்பை ெற்றார்.

**4. அ.கட்டுப்படி**

சின்ன கட்டுப்படியில் புனித தொன்பொஸ்கோவிற்கு புதிய ஆலயம் கட்டினார்.

**5. வேப்பூர்**

பக்த சபைகளை ஏற்படுத்தினார்.
இளைஞர்களை ஒருங்கிணைத்து மேம்பாட்டுக்காக உழைத்தார்.
மாணவர் கல்வி தரத்தை உயர்த்த மாலை நேர வகுப்புகள் நடத்தினார்.
பங்கு மக்களோடு மக்களாக ஏழ்மையான முறையில் வாழ்ந்தார்.
பக்த சபைகளை சீர் அமைத்தார்.

அவர் இருந்த அனைத்து பங்குகளிலும் மக்களோடு மக்களாக இணைந்து மக்களுடைய தேவைகளை அறிந்து உதவி கரம் நீட்டினார். கொரோனா காலம், இயற்கை சீற்றம் காலங்களில் வேப்பூர் பங்கு மக்களோடு இறுதி வரை எளிமையாகவும், அனைத்து குருக்களோடு சுமூகமான உறவுடனும், பங்குகளில் ஆன்மீக பணிகளில் முக்கியத்துவத்துடனும், எந்த நேரத்திலும் மக்கள் அவரை சந்திக்க அவரது அறை திறந்தே இருக்கும். இவ்வாறு 46 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றி தனது 72-வது அகவையில் 30.09.2025 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

"ஆண்டவர் தம் அன்பர்களின் (அருட்தந்தை ஆல்பின் ஜஸ்டஸ் கலிஸ்டஸ்) சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (திருப்பாடல் 116:15)

பிரிவால் வருந்தும்
மேதகு ஆயர் முனைவர். **அம்புரோஸ் பிச்சைமுத்து**
குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் மற்றும் இறைமக்கள்
வேலூர் மறைமாவட்டம்.

## CALANDER

**November 2025**

| | | |
|---|---|---|
| 1 | Sat | All Saints day, *Solemnity* |
| 2 | Sun | All Souls Day |
| 3 | Mon | St. Martin de Porres, *Rel.* |
| 4 | Tue | St. Charles Borromeo Bp., *Mem.* |
| **9** | **Sun** | **The Dedication of the Lateran Basilica in Rome., *Feast.*** |
| 10 | Mon | St. Leo the Great Dr., *Mem* |
| 11 | Tue | St. Martin of Tours Bp., *Mem.* |
| 12 | Wed | St. Josaphat Bp., M., *Mem.* |
| 15 | Sat | St. Albert the Great, Bp., Rl.Dr. |
| **16** | **Sun** | **33rd Ordinary Sunday** |
| 17 | Mon | St. Elizabeth of Hungary rel., *Mem.* |
| 18 | Tue | Dedication of the Basilica of St. Peter & St. Paul, App. |
| 21 | Fri | The Presentation of the B.V.M. *Mem.* |
| 22 | Sat | St. Cecilia, Vir, Mr. *Mem.* |
| 23 | **Sun** | **Our Lord Jesus Christ, King of the Universe, *Solemnity.*** |
| 24 | Mon | Martyrdom of St. Andrew Dung - Lac and his companions |
| 25 | Tue | St. Catharine of Alexandria, Vir., M. |
| **30** | **Sun** | **1st Sunday of Advent** |

## RIP

In your Charity kindly pray for Rev. Fr. Albin Justus who passed away on 30.09.2025. May his soul rest in peace.



# ALL SAINTS' DAY

# ALL SOULS' DAY